செய்தி வெளியீடு எண். 247 நாள்: 12.05.2018

**குழந்தைகள் சார்ந்த சட்ட சேவை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட முதன்மை நீதிபதி / மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் திரு.டி.இளங்கோவன் ஆகியோர் பல்வேறு துறைகள் சார்பாக அமைக்கப்பட்ட அரங்குகளை பார்வையிட்டு நலத்திட்டங்களை வழங்கினர்**

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து குழந்தைகள் சார்ந்த சட்ட சேவை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட முதன்மை நீதிபதி / மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் திரு.டி.இளங்கோவன் ஆகியோர் பல்வேறு துறைகள் சார்பாக அமைக்கப்பட்ட அரங்குகளை இன்று (12.05.2018) பார்வையிட்டு நலத்திட்டங்களை வழங்கினார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் சட்ட சேவை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு முகாமில் சமூக நலத்துறை சார்பாக 7 பெற்றோர்களுக்கு இரண்டு பெண்குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.50 ஆயிரத்திற்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் சேமிப்பு பத்திரங்களையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பாக 2 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ரூ.1320 மதிப்பிலான நடைப்பயிற்சி உபகரணங்கள் 3 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் மாவட்ட முதன்மை நீதிபதி / மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் ஆகியோர் வழங்கி பெண் குழந்தைகளை பேணி காகக்ப்பட வேண்டுமெனவும் அவர்களுக்கு கல்வி அறிவு வழங்கப்பட்ட வேண்டிய அவசியம் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு , ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும பழங்குடியினர் நலத்துறை, செய்தி மக்கள் தொடர்புத் துறை, சுகாதாரத் துறை சார்பாக மருத்துவ முகாம், அஞ்சல்துறை ஆகிய துறைகளின் சார்பாக அரங்குகள் அமைக்கப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்ச்சியில் பள்ளிப்பட்டு உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர் வட்ட சட்டப்பணிகள் குழுத்தலைவர் திருமதி.நளினி, திருவள்ளூர் மூத்த நீதிபதி திருமதி.ஜி.சரஸ்வதி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ச.மீனா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் திரு.செந்தில் மற்றும் துறைச்சார்ந்த அரசு அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**